[9th August 1963

திரு. கே. ஏ. மதியழகன் : இவை எல்லாம் சாதாரண நடைமுறை நடவடிக்கைகள் என்றாலும் கொத்தவால் சாவடியைச் சுற்றி இருக்கின்ற கிடங்குகள், பெரிய வர்த்தக நிறுவனங்களையெல்லாம் புறநகராக வெளியே அகற்றிவிட்டால் நன்மை தரும் என்பதை அரசாங்கம் அறியுமா? அந்த முறையில் வெளியே மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கொத்தவால் சாவடியை அபிவிருத்தி செய்வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களையும் விட்டு விட்டு மிருகக் காட்சிச் சாலை இருக்கும் பகுதிக்கு மாற்றி விட்டால் பிரச்னை ஒரேயடியாகத் தீர்ந்து விடுமல்லவா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது ஏற்கெனவே பரிசீலனையில் இருப்பதாகக் கூறினேன். கார்ப்பரேஷன் கவுன்சில் கூட்டத்திலே கூட, மிருகக் காட்சிச் சாலைக்குப் பக்கத்தில் உள்ள கேசவ பார்க் இருக்கும் 9 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இடத்தை இதற்குச் சிபார்சு செய்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்து, பொது ஜன அபிப்பிராயத்தைக் கொண்டு, பின் முடிவு செய்யும்.

கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

*** 66 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் எத்தனை?

(இ) அவைகட்கு சர்க்கார் செய்துள்ள நிதி உதவி, ஆலை வாரியாக எவ்வளவு?

(உ) மத்திய அரசாங்கம் இந்த உதவிகளை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இம்மாநிலத்தில் இதுவரை 11 கூட்டுறவு நூற்பு ஆலைகள் நிறுவ அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. அவற்றுள் 3 ஆலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

(இ) மேற்கூறிய 11 ஆலைகளில் 6 நூற்பாலைகளின் மூலதனத்தில் அரசாங்கம் கீழ்க்கண்டவாறு பங்கெடுத்துக் கொண்டுள்ளது.

	ரூ.
(1) தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை, பேட்டை, திருநெல்வேலி ஜில்லா.	16.78 லட்சம்
(2) ராமநாதபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை, ஸ்ரீவில்லிபுத்தூர், ராமநாதபுரம் ஜில்லா.	12.00 ,,

9th August 1963]

(3) திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, நாசரத், திருநெல்வேலி ஜில்லா ..	10.00	லட்சம்
(4) சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை, அம்மாபேட்டை, சேலம் ஜில்லா	10.00	
(5) காஞ்சீபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சீபுரம், செங்கற்பட்டு ஜில்லா	10.00	„
(6) மதுரை கூட்டுறவு நூற்பு ஆலை, மேலூர், மதுரை ஜில்லா ..	10.00	„
	68.78	„

(உ) இல்லை.

திரு. க. ர. நல்லசிவம்: பதினேரு ஆலைகள் ஆரம்பிக்க அரசாங்கம் அனுமதியளித்தும் ஏன் மூன்று ஆலைகள்தான் ஆரம் பிக்கப்பட்டு நடக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அனுமதி இப்போதுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆலை வைக்கக் குறைந்தது இரண்டு வருஷமாகும்.

திரு. கே. ஏ. மதியழகன்: தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போதுதான் அதற்கு ஷேர் சேர்க்கப்பட்டு வேண்டிய அளவு அரசாங்கத் தொகை சேர்க் கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அது நிறைவேற்றப்படும்.

திரு. சா. கணேசன்: ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற தொகை எந்த விகிதாசாரத்தில் கொடுக் கப்படுகிறது? அந்தக் கம்பெனியின் மொத்த காப்பிட்டலில் இவ்வளவு பர்செண்ட் என்ற முறையில் எடுத்துக் கொள்ளப்படு கிறதா அல்லது இருக்கிற சூழ்நிலைக்குத் தக்கபடி எடுத்துக் கொள்ளப்படுகிறதா? அப்படியானால், எந்தெந்த விகிதாசாரத்தில் அவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பங்குத் தொகை எவ்வளவு சேர்க்கிறார்களோ அதற்கு மாச்சிங்காக கொடுக்கப்படு கிறது. பத்து லட்சம் வசூல் செய்தால் பத்து லட்சம் கொடுக் கிறோம். பன்னிரண்டு லட்சம் வசூல் செய்தால் 12 லட்சம் கொடுக் கப்படுகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி: தஞ்சை ஜில்லாவில், மாயவரத் தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்க ஒரு திட்டம் இருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பங்குத் தொகை இன்னும் வசூலாகவில்லை. அங்கத்தினரைப் போன்றவர்கள் பங்குத் தொகை வசூல் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[9th August 1963

திரு. டி. கார்ச்சா கவுடர்: பத்திரிகை செய்திப்படி நீலகிரி ஜில்லா நீங்கலாக மற்ற ஜில்லாக்களில் ஒவ்வொரு நூற்பாலை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. நீலகிரி ஜில்லாவில் நூற்பாலை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு கோவையிலிருந்து விண்ணப்பம் வந்திருக்கிறதா? அப்படியானால் அதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் அவர்கள் கேட்பது தனியார் துறையைப் பற்றியது. நான் பதில் கொடுத்திருப்பது கூட்டுறவுத் துறை சம்பந்தமான நூற்பாலைகள், தனியார் துறை பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் கொடுக்கப் படும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் அவர்கள் செய்யவேண்டுமானால் குளிர்ச்சிப் பிரதேசத்தில்தான் செய்ய முடியும் என்று இங்கிலாந்து போன்ற நாடுகளில் சொல்லப் படுகிறது. நீலகிரி குளிர்ச்சிப் பிரதேசம் ஆயிற்றே, ஆகவே தனியார் துறையில் அல்லது கூட்டுறவுத் துறையில் அந்த ஆலையை அங்கு அமைக்க முயற்சிக்கப்படுமா? தனியார் துறையிலிருந்து விண்ணப்பங்கள் செய்திருந்தால் அதற்கு முதல் இடம் கொடுத்துச் சிபார்சு செய்யப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் அவர்கள் சொல்வது சரியல்ல. சகாரா பாலைவனத்தில் கூட விஞ்ஞான வளர்ச்சி காரணமாக செய்யமுடியும். அந்த இடத்தில் எந்த குளிர்ந்த சாதனங்கள் வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதை இயந்திர சாதனம் மூலம் வைத்துக் கொள்ளலாம். நீலகிரியில் நூற்பாலை வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம்: கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மத்திய அரசு செய்யக்கூடிய உதவிகள் யாவை?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ப்ளான் நிதி ஒதுக்கீட்டில் கூட்டுறவு சம்பந்தமான தொழில்கள் நடத்துவதற்காக மத்திய சர்க்கார் நிதி ஒதுக்குகிறார்கள். அப் பணத்திலிருந்துதான் 10 லட்சம், 12 லட்சம் என்று கொடுக்கப்படுகிறது.

திரு. ர. ஜீவரத்னம்: ஜில்லாக்களில் ஆரம்பிக்கப்படும் கூட்டுறவு ஆலைகளில் அந்தந்த ஜில்லாவில் உள்ள கூட்டுறவு மத்திய பாங்குகள் கட்டாயமாக பங்குத் தொகை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சர்க்காரிலிருந்து ஏதாவது உத்தரவு போயிருக்கிறதா? அப்படி போயிருக்கக்கூடிய உத்தரவை நிறைவேற்றியிருக்கக்கூடிய மத்திய பாங்குகள் யாவை?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய பாங்குகள் கட்டாயமாகப் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சர்க்கார் சொல்லவில்லை. அவ்வாறு சொல்வதும் பொருத்தமாகாது. மத்திய பாங்குகள் எல்லாம் இந்தவிதமான கூட்டுறவு ஆலைகளில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்பது சர்க்கார் கருத்து. அதை

9th August 1963]

நாம் அவர்களுக்கு சிபார்சாகச் சொல்கிறோம். கூட்டுறவுத் துறையில் தொழில்கள் வளரவேண்டுமென்று சொன்னால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பங்கு எடுத்துக்கொண்டால்தான் வளர்ச்சி அடையும். அதனால் அந்தவிதமான சிபார்சை சர்க்கார் செய்திருக்கிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : பொதுத் தேர்தலுக்கு முன்னால் மதுரை ஜில்லாவில் உசிலம்பட்டி பகுதியில் கூட்டுறவு மில் ஆரம்பிக்கப்படுமென்று கலெக்டர் கையெழுத்திட்டு நோட்டீஸ் போட்டு பங்குத்தொகை வசூலிக்கப்பட்டது. தேர்தல் முடிந்த பிறகு அதை மேலூர் பகுதிக்கு மாற்றியிருப்பதாகத் தெரிகிறது. அதற்குக் காரணம் என்ன ?

MR. SPEAKER : The question was asked several times by the hon. Member. However I will allow it.

THE HON. SRI R. VENKATARAMAN : It was also discussed during the Budget Debate.

திரு. மா. இராசாங்கம் : ஏலக்காய், காப்பி தோட்டங்களை தனியார் துறையை விட்டு கூட்டுறவு முறையில் ஏற்படுத்துவது என்று இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்களே, அது நிறைவேறக் கூடியதா ?

(பதில் இல்லை.)

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சையில் ஆரம்பிக்கப்படக்கூடிய நூற்பாலை எந்த நிலையில் உள்ளது ? அதற்கு அரசாங்கம் நிதி உதவி செய்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் கனம் அங்கத்தினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் கேள்விக்குப் பதில் சொன்னேன். இன்னும் ஷேர் காப்பிட்டல் வசூலாகவில்லை. வசூல் செய்த பிறகு கவனிக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கூட்டுறவு நூற்பாலையில் ஜில்லா மத்திய பாங்குகள் பங்குத் தொகை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று ரிசர்வ் பாங்கு கருத்து தெரிவித்திருப்பதாகத் தெரிகிறதே, அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப் பரிசீலனை செய்து ராஜ்ய சர்க்கார் மத்திய பாங்குகளுக்குச் சிபார்சு செய்திருக்கிறது. இந்தவிதமாக உதவி செய்தால்தான் தொழில் துறை கூட்டுறவு முறையில் வளர்ச்சி அடையும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ர. ஜீவரத்னம் : கூட்டுறவு மத்திய பாங்குகள் கூட்டுறவு மில்கள் சம்பந்தமாக இவ்வளவு இவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப காலத்தில் மத்திய பாங்குகள் பங்கு எடுத்துக்கொள்ளாவிட்டால் தனியாரிடம் வசூல் செய்ய அனுமதி கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றி எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்யப்படும்.

[9th August 1963

திரு. ஆ. துரையரசன் : தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்பட இருக்கிற ஆலைக்குப் போதுமான பங்குத் தொகை சேர்க்கப்பட வில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுவரை எவ்வளவு தொகை சேர்க்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மூன்று கூட்டுறவு ஸ்பின்னிங் மில்களும் லாபகரமாக நடந்து கொண்டிருக் கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பேட்டை மில் லாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது. மற்ற இரண்டு இப்போதுதான் ஆரம் பிக்கப்பட்டிருக்கின்றன. வரவு செலவுக் கணக்கை ஒரு ஆண்டு கழித்துத்தான் பார்த்துச் சொல்ல முடியும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தனியார் நடத்தும் மில்களில் நல்ல நிர்வாகம் இருப்பதாகவும் கூட்டுறவு முறையில் நடக்கும் ஆலை களில் நிர்வாகம் சரிவர இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இதை சரியான முறையில் கண்காணிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கத்தினர் அவர்கள் சொல்கிற வாதம் தனியார் துறையைப் பெருமைப் படுத்த வேண்டு மென்று சொல்கிற வாதம். தனியார் துறையாக இருந்தாலும் சரி, சர்க்கார் துறையாக இருந்தாலும் சரி அல்லது கூட்டுறவு துறை யாக இருந்தாலும் சரி நிர்வாகத்தின் திறமை அங்கு அமைகிற வர்களைப் பொறுத்தது. ஆகவே, துறையைப் பொறுத்து நிர்வாகம் நன்றாகயிருக்கிறதா இல்லையா என்று சொல்ல முடியாது.

திரு. ப. உ. சண்முகம் : வட ஆற்காடு மாவட்டம் வேலூர் கூட்டுறவு நூற்பாலையில் பங்குத் தொகை எடுத்துக் கொள்கிறேன் என்று முதலில் கூறி பின்னால் மறுத்து விட்டது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மறுத்து விடவில்லை. பரி சீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

Mr. SPEAKER : The next question also relates to the same subject.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கூட்டுறவு நூற்பாலை சிலவற்றில் வேலை துவங்கி இருக்கிறது, சிலவிடங்களில் வேலை துவங்கவில்லை என்கிறார்கள். தனியார் துறையிலாவது துரிதமாக வேலையைக் கவனிக்க சர்க்கார் முன்வருமா ? நூல் பற்றாக்குறையை நிவர்த் திக்கத் தனியார் துறையிலாவது அனுமதி வழங்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கூட்டுறவுத் துறையைவிட தனியார்த் துறை மேலானது என்ற அபிப்பிராயம் அங்கத்தின ருக்கு இருக்குமோ என்று தெரியவில்லை. பத்து பேர்கள் பணம் போடுவது என்றால் சீக்கிரம் போட்டு விடலாம். ஆயிரம் பேர் களிடமிருந்து வசூல் செய்யவேண்டுமென்றால் காலதாமதமாகும். கூட்டுறவு அடிப்படையை ஒத்துக் கொண்டால் இந்தக் கேள்விக்கே இடமிருக்காது.

9th August 1963]

திரு. எம். எஸ். மணி : பேட்டை கூட்டுறவு ஆலை லாபகரமாக நடக்கிறது என்ருர்கள். அது லாபகரமாக நடக்கப் பாடுபட்ட தொழிலாளர்களுக்கு 1960-61-ல் போனஸ் கொடுக்கப்படவில்லை என்பதை அறிவார்களா ? அப்படியானுல் தொழிலாளர் அமைச்சர் அவர்களுக்குச் சிபார்சு செய்வார்களா ?

MR. SPEAKER : This question relates to the Hon. Minister for Labour. The Hon. Member should give notice of a separate question.

*** 67 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வந்தவாசியில் அமைக்க இருந்த கூட்டுறவு நூற்பு ஆலையை வேலூருக்கு மாற்றியது ஏன் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிலம், தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து, கச்சாப் பொருள் கிடைக்கும் வசதிகள், வேண்டிய பங்குத் தொகை வசூலாகும் சூழ்நிலை, இவைகளைக் கவனித்துக் கூட்டுறவு நூற்பு ஆலையை வேலூரில் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் இப்பொழுது கூறிய காரணம் புதுமையாக இருக்கிறது. முதலில், வந்தவாசியில் நூற்பு ஆலை ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டு, வந்தவாசியில் பங்குத் தொகையும் வசூலிக்கப்பட்டது என்ற ஒரு நிலைமையும் இருந்தது. அங்கு பங்குத் தொகை வசூலிக்கப்படாததன் காரண மாகத்தான் வேலூருக்கு மாற்றப்பட்டதாகத் தெரிகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவது உண்மையா ? அப்படியிருந்தால், முதலில் வந்தவாசியில் ஆலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு, பங்குத் தொகை வசூலிக்கப்பட்டது ஏன் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாக ஒரு குழப்பமான அபிப்பிராயம் இருப்பதை நான் விளக்க விரும்புகிறேன். ஒரு ஜில்லாவிலே கூட்டுறவு ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னுல், ஒரு இடத்தை மாத்திரம் சர்க்கார் தேர்ந்தெடுப்பதில்லை. இரண்டு, மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்து பிறகு எந்த இடத்தில் முடிவாக வைக்க முடியும் என்பதைத் தீர்மானிக்கிருேம். இரண்டு, மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்த உடனேயே, அந்த அந்த ஊரில் இருப்பவர்கள் பங்குத் தொகை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்து விடுகிருர்கள். அந்த அந்த ஊரில் ஆலை ஏற்படுவதற்கு முடிவாகத் தீர்மானிக்கப்பட்டு விட்டது என்று நினைத்துக்கொண்டு. பிறகு கடைசியில் எல்லா வசதிகளையும் கருதி ஒரு இடத்தில் வைப்பது என்று முடிவு எடுத்தவுடன், மற்ற இடங்களில் இருப்பவர்கள் தங்கள் ஊரில் வைக்கவில்லை என்று புகார் சொல்லுகிருர்கள். வட ஆற்காடு ஜில்லாவில் வந்தவாசி மட்டுமல்ல, திருவண்ணுமலையிலும் காலம் சென்ற பழனிப் பிள்ளை அவர்கள் பங்குத் தொகை வசூல் செய்ய ஆரம்பித்